பக்கங்கள் 15

மாலை முரசு



# கொழும்பில் சூடு; ஒருவர் படுகாயம்

கொழும்பில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 24 ஞாயிற்றுக்கிழமை 10.09.2023 அதிர்வு 41

# அப்பாவிகளின் வீட்டை உடைக்கும் காடையர்கள்

**உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வாருங்கள் என பெருந்தோட்ட அமைச்சரிடம் மனோ வலியுறுத்து**



இரத்தினபுரி, வெள்ளந்துர தோட்டத்தில் அரங்கேறியுள்ள சம்பவம் தொடர்பில் பெருந் தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரணவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார் 04▶

# தாய், மகள் மீது வாள் வெட்டு!

**யாழில் வன்முறைக் கும்பல் வெறியாட்டம்**



யாழ்ப்பாணத்தில் தாய் மற்றும் மகள் மீது வன்முறைக் கும்பல் ஒன்று வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நீர்வேலிப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாய மடைந்த தாயும் மகளும் 04▶






# ‘சனல்-4’ முன்வைத்த குற்றச்சாட்டை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு!

**நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் நியமனம்**

கொழும்பு, செப்ரெம்பர் 10

இலங்கையில் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி ஆவணப்படத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

மேலும், இந்தத் தாக்குதலின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் செயற்பட்டார் என முன்னாள் சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது. 04▶



# தாக்குதல் குறித்து முன்னரே அறிந்திருந்த 15 ஆயிரம் பேர்

**பேராயர் பலத்த சந்தேகம்**

2019இல் உயிர்த்த ஞாயிறு தினமன்று நடைபெறவிருந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து திருச்சபை அதிகாரிகள் உட்பட பலர் அறிந்திருக்கவில்லை என்றாலும், விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகளின்படி ஏறக்குறைய 15 ஆயிரம் பேர் அது பற்றி முன்னரே அறிந்திருந்தனர் என்று 04▶



# குற்றம் சுமத்தப்பட்டவர்களே குற்றச்சாட்டை விசாரிப்பதா?

**நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிப்பதை கிண்டல் செய்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னணியில் ராஜபக்ஷக்களே உள்ளனர் என்பது தற்போது அம்பலமாகியுள்ளது. உள்ளக விசாரணைகள் மூலம் தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மைகளை வெளிக்கொணர முடியாது. 04▶

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

# இதுவரையிலும் உள்நாட்டில் நடந்த விசாரணைகள் வெற்றியடையவில்லை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் வெற்றியடையவில்லை எனவும் 'சனல்-4' வெளிக்கொணர்ந்த விடயங்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சனல்- 4 காணொலி தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-



பிரித்தானியாவின் சனல்-4 வெளியிட்டுள்ள காணொலியை முற்று முழுவதுமாக எம்மால் நிராகரித்துவிட முடியாது. இருப்பினும் இந்த காணொலியை நூற்றுக்கு நூறு வீதம் உண்மை என கூறவும் முடியாது. எனினும் சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் சுயாதீனமான, சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே சிறந்தது. விசாரணை நடத்துமாறும், உண்மையை வெளிக்கொண்டு வருமாறும் இங்குள்ளவர்களுக்கு கூறினாலும் அது சரிவராது.

மேலும் இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் வெற்றியடையவில்லை.

இதனை என்னால் அடித்துக் கூறலாம். விசாரணைகள் வெற்றியடையவில்லை. தற்போது ஐக்கிய நாடுகள் சபையும் சனல் 4 காணொலி தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துமாறு கூறியுள்ளது. எனவே ஐக்கிய நாடுகள் சபை கூறு வது போன்று சனல் 4 வெளிக்கொணர்வு தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொண்டால் சிறந்தது என நான் நினைக்கிறேன் என்றார்.

# தயாசிறிக்கு அமைச்சுப் பதவி தர பல முறை ரணில் அழைத்தாராம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு அமைச்சுப் பதவியை தருவதற் காக பல தடவைகள் அழைப்பு விடுத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்கத் தான் தயாராக இல்லை என பண்டுவஸ்நுவர பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்த வாரம் தான் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ள வுள்ளார் எனச் சிலர் கூறினாலும் அமைச்சுப் பதவியை ஏற்கத் தாம் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு நல்லாட்சி அரசே பொறுப்புக்கூற வேண்டும்!

### மொட்டு எம்.பியான அட்மிரல் சரத் வீரசேகர கூறுகிறார்

குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தது. பயங்கரவாதி சஹ்ரானை கைது செய்து, முறையாக விசாரணை செய்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம். குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாவல பகுதியில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல்-4' வெளியிட்டுள்ள காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பொய்களின் திணிப்பு என்பதை எதிர்க்கட்சியினர் நன்கு அறிவார்கள். இருப்பினும் தங்களின் அரசியல் நோக்கத்துக்காக இதனைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.



சனல் 4 வெளியிட்டுள்ள காணொலியை நாடு என்ற ரீதியில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்த்தால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. கோட்டபய ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிக்காக முஸ்லிம் அடிப்படைவாதிகள் தமது உயிரைத் தியாகம் செய்தார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தது. அடிப்படைவாதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னிலை வகித்தார்கள்.

பயங்கரவாதி சஹ்ரானை கைது செய்யுமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலும் அரசியல் நோக்கங்களுக்காக அவர் கைது செய்யவில்லை. குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் 10 அடிப்படைவாத சம்பவங்கள் பதிவாகின. வனாத்தவில்லு பகுதியில் வெடிப்பொருள்கள் களஞ்சியசாலை கண்டுப்பிடிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்கள் குறித்து நல்லாட்சி அரசாங்கம் உரிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுத்திருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் உட்பட ஒட்டுமொத்த அரசாங்கத்தின் உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களுடன் இணக்கமாக செயற்பட்டார். ஆகவே குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும். – என்றார்.

# முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி





(மன்னார் நிருபர்)

மன்னார் அல். அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நேற்று சனிக்கிழமை (09) காலை உப்புக்குளம் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி ஆசிரியர் ஆர்.எம்.பரீதா தலைமையில் இடம்பெற்ற கண்காட்சியில் மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர் என்.நகுசீன், உப்புக்குளம் தெற்கு கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், உப்புக்குளம் பள்ளிவாசல் செயலாளர் உள்ளடங்களாக முன்பள்ளி சிறார்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்பள்ளி சிறார்களால் உருவாக்கப்பட்ட பொருள்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மூவருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## புல்லின் பூவிலிருந்து வெளியாகும் துகள்களால் மக்கள் அசௌகரியம்

(அஸ்ஹர்இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலகர் பிரிவுக் உட்பட்ட மாளிகைக்காடு நீரேரியில் வளர்ந்துள்ள ஒரு வகைப் புல்லின் பூவிலிருந்து வெளியாகும் வெள்ளை நிறமான சிறு துகள்கள் இப்பிரதேசத்திலுள்ள மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

கடந்த பல வருட காலமாக குறிப்பிட்ட நீரேரியில் வளர்ந்துள்ள இப் புல் பற்றைக் காடாக காணப்படுகிறது. இதனால் தோணாவின் ஊடாகச் செல்லும் வெள்ள நீர் பாலத்தின் ஊடாக வடிந்து செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அருகிலுள்ள பிரதேசம் மழை காலங்களில் வெள்ளக் காடாக காட்சியளிக்கும்.

இப் புல் பற்றைக்குள் விஷ ஜந்துக்கள் , நோய்களை பரப்பக் கூடிய நுளம்புகள் அதிகமாக பெருகிக் காணப்படுகின்றன.

மாளிகைக்காடு பாலத்துக்கு அருகில் அல் ஹுசைன் வித்தியாலயம் அமைந்திருப்பதால் பாடசாலை மாணவர்களும் , ஆசிரியர்களும் நாளாந்தம் பல சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடுமையான காற்று வீசும் போது புல்லின் பூவிலிருந்து வெளியாகும் துகள்கள் காற்றில் எடுத்துச் செல்லப்பட்டு உடம்பில் படும்போது ஒருவகைத் தாக்கத்தை தோலில் ஏற்படுத்துகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.







## யாழ். பற்றிக்ஸ் கல்லூரியில் ரெனிஸ் சுற்றுப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ். புனித பற்றிக்ஸ் கல்லூரியில் டென்னிஸ் விளையாட்டை மாணவர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி, மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ஏ.பி.திருமகன் ஆலோசனையின் பேரில் ஆசிரியர்களின் பங்களிப்புடன் ரெனிஸ் சுற்றுப்போட்டி கல்லூரி டென்னிஸ் மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் தரம் 6 பிரிவில் ஏ.ஜி.நிஸாந் சம்பியனாகவும், எஸ்.றஜிந்தன் இரண்டாம் இடத்தையும், எஸ்.பிராயன் மூன்றாம் இடத்தையும், தரம் 7 பிரிவில் வீ.கசோன் சம்பியனாகவும், எஸ்.டினூஸாந் இரண்டாம் இடத்தையும், ஜே.என்.ரெரோன் மூன்றாம் இடத்தையும், தரம் 8 பிரிவில் ஆர்.நிதீஸ் சம்பியனாகவும், சீ.எபினேஸ் இரண்டாம் இடத்தையும், ஜே.சந்தோஸ் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கும் நிகழ்வில் கல்லூரி பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## குற்றம் சுமத்தப்பட்டவர்களே...

குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே நாடாளுமன்றத்தில் தெரிவு குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது குற்றவாளி ஒருவர் தனது குற்றத்தை தானே விசாரிப்பது போன்றது என்பதுடன் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசாங்கமே உள்ளது என வெளிக்கொணரப்பட்டுள்ள விடயங்கள் எங்களுக்கு ஒன்றும் புதிதல்ல.

இது ஒரு ஆச்சரியமான விடயமும் அல்ல. சனல் 4 காணொலியில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தாக்குதலின்போது இடம்பெற்ற உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் காரணமாக நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

எவ்வாறாயினும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கும், ஆட்சி அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற்கும், அதனை வெற்றி கொள்வதற்கும் இராணுவத்தைப் பயன்படுத்தி இவர்கள் எந்தவொரு உச்சக்கட்டத்துக்கும் செல்வார்கள்.

தமது மக்களையும் இழப்பதற்கு தயார் என்பதை சரியான கோணத்தில் அறிந்துகொள்ள முயற்சித்தால் இந்த தாக்குதலின் பின்னணி குறித்த உண்மைகள் அனைத்தையும் சிங்கள மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன்.

மேலும் நாட்டின் உள்ளக விசாரணைகள் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி மற்றும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார் என்பதை அறிந்து கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியாகும்.

நாடாளுமன்றத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே பெரும்பான்மை காணப்படுகிறது.

இந்த பெரும்பான்மை, அரசாங்க தரப்பினரையே இன்று 'சனல்-4' நிறுவனம் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தியுள்ளது.

தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷ தரப்பினரே உள்ளனர் என்பதை இந்தக் காணொலி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஷ தரப்பினரே நாடாளுமன்றத்தில் தெரிவுக் குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்வது என்பது வேடிக்கையானது.

அதாவது குற்றவாளி ஒருவர் தன்னுடைய குற்றத்தையே தானே விசாரிப்பது போன்றது. இது போன்ற முட்டாள்தனமான விடயத்துக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றார்.

## தாக்குதல் குறித்து...

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“2019 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றி எங்களுக்குத் தெரியாமல் இருந்த போதிலும், கிட்டத்தட்ட விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 15 ஆயிரம் பேர் இது தொடர்பில் அறிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 99 சதவீத விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ள கருத்து குறித்தும் எங்களுக்குப் பலத்த சந்தேகம் உள்ளது.

இந்தக் கொடூரமான குற்றத்தைச் செய்வதற்குக் குற்றவாளிகளுக்கு உதவுவதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் மற்றொரு குழுவும் இருக்கின்றது எனத் தகவல் கிடைத்துள்ளது.

நாட்டில் சட்டம் – ஒழுங்கை நிலைநாட்ட முடியாத மற்றும் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியாத – உயர்நீதிமன்ற தீர்ப்புகளுக்கு மதிப்பளிக்க முடியாத – தற்போதைய தலைவர்களுடன் அமர்ந்து கலந்துரையாடுவதற்கு நாங்கள் தயாராக இல்லை.” – என்றார்.

## அப்பாவிகளின்...

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“பொலிஸ்காரர்களைப் போலவும், நீதிமன்றக் கட்டளை இருப்பதாகவும் நடித்து அப்பாவிகளின் வீட்டை உடைக்கும் காடையர்களைக் கட்டுக்குள் கொண்டு வாருங்கள் என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் சொன்னேன்.

ஒவ்வொருமுறையும் பதில் கூறுகிறீர்கள், அல்லது ஒரு அரச அரசியல்வாதியை அங்கே அனுப்பி அதன் பின் ஒளிந்துகொள்கிறீர்கள். இதற்குத் தீர்வுதான் என்ன? என்று மேலும் பெருந்தோட்ட அமைச்சரிடம் கேட்டேன்.

இந்தக் கம்பனிக்காரர்களுடன் பணியாற்ற முடியவில்லை. ஜனாதிபதியிடம் பேசி முழுமையான தீர்வைத் தேடுவோம் என ரமேஷ் பத்திரண பதிலளித்தார்.” – என்றுள்ளது.

## தாய், மகள் மீது...

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் தாயும் மகளும் இருந்த வேளை வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் இவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், தனிப்பட்ட பகை காரணமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## ‘சனல்-4’

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு விசாரணைகளின் நடவடிக்கைகள் நிறைவடைந்து இறுதித் தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னர், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை என்பன நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## கொழும்பில் சூடு...


இரத்மலானை ரயில் நிலையத் துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 46 வயதான நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

படுகாயமடைந்த நபர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# தாமரைச்செல்விக்கு சிட்னியில் கௌரவிப்பு

ஐம்பது ஆண்டுகால இலக்கியப் பணியாற்றிய தாமரைச்செல்விக்குச் சிட்னியில் கௌரவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இன்று ஞாயிற்றுக் கிழமை ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் 2023 வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா இடம்பெற்றது.

இதன்போது இலக்கியப் படைப்பாளி தாமரைச் செல்வி, ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



# ஆசிரியருக்குப் பிரியாவிடை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக பல ஆண்டுகளாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியை திருமதி ஆ.ரவீந்திரனின் கல்விச் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை திறந்த வெளியரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசார உத்தியோஸ்தர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பாதுகாப்பு(அற்ற) துறை

'சனல்-4' வெளியிட்ட பிந்திய காணொலி இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்வைக்கையில், அது குறித்து விசாரணை நடத்த முன்னரே பாதுகாப்பு அமைச்சு அந்தக் காணொலிச் செய்தியின் தகவல் முழுவதையும் அடியோடு மறுப்பதாக அரசியல்வாதிகள் போன்று முந்திக்கொண்டு - அவசரப்பட்டு - பகிரங்க அறிக்கை வெளியிட்டிருக்கின்றமை பல தரப்புக்களிலும் கடும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

சுமத்தப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டுகள் குறித்து ஆற,அமர இருந்து விசாரிக்காமலேயே எடுத்த எடுப் பிலேயே அவசர அவசரமாக அதனை மறுக்க முற்படுவதன் மூலம், நடந்த விடயங்களை மூடி மறைப்பதில் பாதுகாப்புத் துறையும் அவசரப்படுகின்றதோ என்று கருதும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கின்றது.

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல் நடக்க இருப்பது குறித்து திருச்சபை வட்டாரங்களுக்கு எதுவும் முன்னர் தெரிந்திருக்கவில்லை, ஆனால் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின்படி வேறு பதினையாயிரம் பேருக்கு அது குறித்து முற்கூட்டியே தெரிந்திருந்தது என்று விசனத்துடன் சுட்டிக் காட்டி இருக்கின்றார் திருச்சபையின் இலங்கைத் தலைவர் தகுதியில் இருக்கும் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

இந்தத் தாக்குதல் குறித்து இலங்கைப் பாதுகாப்புத் தரப்புக்கு முற்கூட்டியே உரிய வட்டாரங்களினால் எச்சரிக்கப்பட்டு இருக்கின்றது. கர்தினால் கூறுவது போல பதினையாயிரம் பேருக்கு முற்கூட்டியே விடயம் தெரிந்திருக்கிறது, ஆனால் பல்வேறு புலனாய்வு அமைப்புகளைப் பல்லாயிரம் கோடி ரூபா செலவில் கட்டமைத்துச் செயல்படுத்தி வரும் இலங்கைப் பாதுகாப்பு தரப்பினால் அதை அறிய முடியவில்லை. அந்தப் பேரழிவைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. பதினையாயிரம் பேருக்கு முற்கூட்டியே தெரிந்திருந்த தாக்குதல் குறித்துத் தான் அறிந்து கொள்ள முடியாத முட்டாள்தனமான கட்டமைப்பையே இலங்கை பாதுகாப்புத் துறை வைத்திருந்தது என்பதுதான் இதன் முடிவு.

அத்தகைய பாதுகாப்புத்துறை இது போன்ற விடயங்களில் தனது தகுதி, நிலைமை, கடந்த கால பெறுபேறு ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துச் செயல்பட வேண்டும்.

பல்லாயிரம் பேருக்குத் தெரிந்திருந்த தாக்குதலைத் தான் அறிந்து கொள்வதற்கோ, தடுத்து நிறுத்துவதற்கோ வக்கற்றிருந்த பாதுகாப்புத்துறை, அந்த மட்டத்தில்தான் செயற்பட வேண்டும்.

புலனாய்வுத் துறையின் மிக மோசமான பின்னடைவு நிலையைத்தான் இந்தக் குண்டு தாக்குதல் அப்பட்டமாக நிரூபித்து நிற்கின்றது. அப்படி இருக்கையில், இப்போது புதிதாக வெளிப்படும் காணொலி ஏற்படுத்தியிருக்கும் சந்தேகங்கள் குறித்து இப்படி அவசரப்பட்டு மறுப்பு தெரிவிக்கவோ, முடிவு செய்யவோ இந்தப் பாதுகாப்புத் தரப்புக்கு தகுதி இல்லை என்பதுதான் உண்மை.

பாதுகாப்புத் துறையின் புலனாய்வுப் பிரிவில் இருப்பவர்கள் எப்படி எப்படி எல்லாம் செயற்படலாம், பாஸ்போர்ட்டுகளை மாற்றிப் பயணிக்கலாம், குடிவரவு - குடியகல்வு பதிவுகளை ஒரு தொலைபேசி அழைப்பில் மாற்றலாம் என்பவை தொடர்பில் பல விடயங்களை இலங்கை இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா பகிரங்கமாகத் தெரிவித்துக் குட்டைப் போட்டு உடைத்து இருக்கின்றார்.

அப்படி இருக்கையில் புலனாய்வு அதிகாரி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் மறுப்பை மட்டும் சாதகமாக்கி, பாதுகாப்பு அமைச்சு அவசர அறிக்கை விட்டமை இன்னொரு தடவை அது சறுக்கி விழப் போகின்றது என்ப தற்கான ஒரு ஒரு கட்டியம்தான்.

இந்தத் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறி தனது சிறுமையை நிரூபித்துக் கொண்ட பாதுகாப்பு அமைச்சு, இன்னொரு தரம் சிறுமைப்பட முயற்சிக்கின்றது என்பதற்கு அதன் பிந்திய அவசர மறுப்பு அறிக்கை ஒரு சான்று.



# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் தடகள போட்டியில் சாதனை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான சிறுவர் விளையாட்டு போட்டியில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயம் சார்பாக கலந்து கொண்ட தரம் 3 , தரம் 4 , தரம் 5 ஆண், பெண், கலப்பு அணிகள் மூன்றும் முதலிடம் பெற்று அபார வெற்றியீட்டியுள்ளனர்.

சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மைதானத்தில் கல்முனை வலயக் கல்வி அலுவலக சிறுவர் விளையாட்டு இணைப்பாளர் எம்.எம்.ஏ. ஹபீல் தலைமையில் நேற்று (09) இடம்பெற்ற போட்டிகளில் இந்த சாதனைகள் இடம்பெற்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை இந்தப் போட்டியில் தேசிய மட்டம் வரை சென்று வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

போட்டிக்காக மாணவர்களைப் பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி பொறுப்பாசிரியர் எம்.எப். எம்.றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என். எம்.ஏ. ஆபாக் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.



# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு லயன்ஸ் கழகம் உதவி

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது இயங்கி வரும் கண் சிகிச்சை பிரிவை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமான கலந்துரையாடப்பட்டுள்ளது.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான அன்பளிப்புகளை வழங்குதல் மற்றும் மர நடுகை நிகழ்வு நேற்று (09) இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் மகேஷ் பாஸ்கால், மாவட்ட ஆளுநர் இஸ்மத் ஹமிட், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, சம்மாந்துறை லயன்ஸ் கழக தலைவர் றாபி, பிராந்திய லயன்ஸ் தலைவர் எம்.டி.எம். அனாப், திட்டமிடல் மருத்துவர் நியாஸ் அஹமட், ஆளுநர் செயலாளர் சிறிபால, பொரு ளாளர் தம்மிக ஏனைய லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்கு பற்றினர்.






# மல்வான முபாறக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மல்வான அல் முபாறக் தேசிய கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை கல்லூரி திறந்த வெளியரங்கில் இடம்பெற்றன.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கல்லூரியின் வரலாற்றுப் பதிவுப் புத்தகத்தில் தனது பதிவைச் செய்தார்.

பழைய மாணவர் கலாநிதி பௌசுல் ஜிப்ரியால் பாடசாலையில் அமைக் கப்படவுள்ள ஆசிரியர் விடுதிக்கான அடிக்கல் நடப்பட்டது.

இதன்போது பாடசாலையின் நூற்றாண்டு விசேட முத்திரையையும் ஜனாதிபதி வெளியிட்டு வைத்தார் .

சாதனை படைத்த பாடசாலையின் பழைய மாணவர்களுக்கு நீதியரசர் அப்துல் கபூர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சி உறுப்பினர்கள் சார்பாக நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் இக்கல்லூரியின் பழைய மாணவரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தானும் கலந்து கொண்டார்.

பாசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு, பழைய மாணவர் சங்கம் என்பன இணைந்து இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன.



# பாரதியை உலகுக்குக் காட்டியவர் சுவாமி விபுலானந்த அடிகளாரே!

## மகாகவி பாரதியின் கொள்ளுப் பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா )

எனது கொள்ளுத்தாத்தா சுப்பிரமணிய பாரதியாரின் பெயரை "மகாகவி" என்று முதன் முதலில் உலகத்துக்கு எடுத்துக் காட்டியவர் இந்த மண் பெற்றெடுத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார்தான்.

அவரது ஆக்கங்களை முதன் முதலில் உலகத்துக்கு எடுத்துக்காட்டிய மாமனிதரும் சுவாமி விபுலானந்த அடிகளாரே.

இவ்வாறு மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்புக்கு வருகை தந்த எட்டயபுரத்து முண்டாசுக் கவிஞன், பாட்டுக்கொரு புலவன் சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி தெரிவித்தார்.

மீன்பாடும் தேன் நாட்டுக்கு வருகை தந்த ராஜ்குமார் பாரதி, மகாகவி சுப்பிரமணியாரின் மகளான தங்கம்மாவின் புதல்வி லலிதா பாரதிக்கு மகனாகப் பிறந்தவர்.

இவர் இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பாடல் பொறியியலாளரும் இந்தியாவின் பிரபல கர்நாடக இசைக் கலைஞராகவும் உள்ளார்.

அவர் கடந்த 4 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். அவருக்கு பாரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவருக்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவனத்திலும், கல்லடி ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்திலும் பெருவரவேற்பளிக்கப்பட்டது.

அவர் கல்லடி இராமகிருஷ்ண மடத்தில் கருத்துத் தெரிவித்தபோது இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்–

பாரதி பிறந்து வளர்ந்த இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்த பொழுது ஒருவித புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

விபுலானந்த சுவாமிகள் எனது கொள்ளுத் தாத்தாவுக்கு அளித்த மாபெரும் கௌரவத்தை நினைவு கூருமுகமாக, நன்றி கூருமுகமாக நான் இன்று முதல் தடவையாக இங்கு வருகை தந்திருக்கின்றேன்.

எனது வாழ்க்கையில் இன்று மறக்க முடியாத நாள். சந்தோஷமாக உள்ளது. உண்மையிலேயே பாரதியாரை இன்றும் இலங்கை மக்கள் இத்துணை நேசிக்கின்றார்கள் என்றால் அதற்கு காரணம் அவரது படைப்புகள். ஆனால் அவற்றை உலகுக்கு வெளிக்கொணர்ந்தது சுவாமிகளே.

பாட்டுக்கு ஒருபுலவன் பாரதியார் என்று அன்று தொடக்கம் இன்றுவரை பேசப்பட்டு வருகின்ற எனது கொள்ளு தாத்தாவின் பெயரை முதல் முதலில் "மகாகவி" என்று உச்சரித்தவர் சுவாமி விபுலானந்தர் . அது மாத்திரம் அல்ல அவரது படைப்புக்களை ஆக்கங்களை வெளிக்கொண்டு வந்தவரும் அவரே.

எனவே அவர் நாமத்திலே இயங்கும் இந்த கல்வி நிறுவனத்தில் வருகை தந்து உரையாற்றியதையிட்டு மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். –என்றார்.

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனுக்கு வருகைதந்த அவரை இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்கு பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்த அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி, பேராசிரியர் சி. மௌனகுரு, உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாணவர் நாடாளுமன்ற தேர்தலுக்கு வேட்புமனு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைவாகப் பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதற்கமைய கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் வழிகாட்டலில் பாடசாலையில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலையின் சமூக விஞ்ஞானப் பிரிவு ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்களும் மாணவரும் கலந்து கொண்டனர்.





# ஊட்டச்சத்து உணவு தொடர்பில் செயலமர்வு

(எம்.எம்.றம்ஸீன்)

கட்டிளமைப் பருவம் பாடசாலை செல்லும் மாணவர்களுடைய உடல் மற்றும் மன ரீதியான நிலை மற்றும் போசாக்கு நிலை அவர்களுடைய பாட சாலை வரவு, பங்கேற்பு போன்று இறுதி யாக கற்றல் காரணிகளுக்கும் நேரடியாக அல்லது மறைமுகமான செல்வாக்குச் செலுத்துகின்றது. இது அனேக கற்கை எிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பாடசாலை காலத்தில் மாணவர்களுடைய போசாக்கு நிலையை உயர்த்துவது மிகவும் முக்கியமானதாகும்.

இந்த விடயங்களில் மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூ ரியில் தரம் 09 இல் கல்வி பயிலும் மாணவிகளுக்கு கல்லூரி அதிபர் ஏ. பி.நஸ்மியா சனூஸ் ஆலோசனையின் பேரில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் துறைக்கு பொறுப்பான இணைப்பாளர் பொது சுகாதார பரிசோ தகர்கள் எம்.ஏ.எம். நியாஸ் நெறிப்படுத் தலில் “கட்டிளமைப்பருவம் மற்றும் ஊட் டச்சத்து உணவு” தொடர்பான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை கல்லூரி சேர் ரசீக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வுக்கு பிரதான வளவாளராக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர். எம் அஸ்மி, கட்டிளமைப் பருவம், ஊட்டச்சத்து உணவு, போதைப் பொருள் பாவனை விழிப்புணர்வு, உடற்பயிற்சி, வீதி விபத்து, சமிக்ஞைகள் குறியீடுகள், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு தலைப்புக்களில் கருத்துக்களை வழங்கினார்.

# கிராம உத்தியோகத்தர்கள் தொழில் சங்க நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோ கத்தர்கள் சங்கத்தின் கூட்டணிகள் இணைந்து நலன்புரி நன்மைகள் திட் டத்தில் இருந்து பல காரணங்களுக்காக விலகி, தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

அனைத்து கிராம உத்தியோகத்தர்க ளும் அங்கத்துவம் வகிக்கும் எமது இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் உட்பட ஏனைய கிராம உத்தியோ கத்தர் சங்கங்களும் இதில் இணைந்துள் என என்று அதன் தலைவர் டபிள்யூ. ஜி. கமல் கித்சிரி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

இந்தத் தொழிற் சங்க நடவடிக்கை சம்பந்தமாக அரச நிர்வாகங்கள் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர், ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், அனைத்து மாவட்ட, பிரதேச செயலாளர் கள் மற்றும் நலன்புரிச் சபையின் தலைவர் போன்றோருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்வுக்கு நலன்புரி நன் மைகள் சபை மற்றும் எமது தொழிற் சங்கம் மற்றும் உரிய பிரிவினருடன் கலந்தாலோசித்து உடன்பாடுகள் எட்டப்படவேண்டும்.

இவ்விடயத்தில் தனித்து ஒரு மாவட்ட செயலாளரோ அல்லது பிரதேச செயலா ளரோ உடன்பாட்டுக்கு வருமாறு எமது சங்கத்தையோ, உறுப்பினரையோ கட்டாயப்படுத்த முடியாது.

இருந்த போதும் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இல்லாத நடைமுறைகள் யாழ். மாவட்டத்தில் திணிக்கப்படுவதாக எமது உறுப்பினர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஒருசில பிரதேச செயலகங்களில் நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறையில் இல்லாத படிவங்களை பொது மக்களிடம் கைய ளித்து அதனை பூரணப்படுத்தி கிராம அலுவலர்களால் உறுதிப்படுத்தி வழங் கினால்தான் உங்களுக்கு நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு கிடைக்கும் என்று கூறிவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நலன்புரி நன்மைகள் விடயத்தில் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடும் எமது சங்க உறுப்பினர்கள் இதனை உறுதிப்படுத்துவதை தவிர்த்து வருகி றார்கள்.

இந்த நிலையில் சில பிரதேச அதிகா ரிகள் பொது மக்களைக் கிராம அலுவ லர்களுக்கு எதிராகத் தூண்டிவிடும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.


இதன் போது பொது மக்கள் சிலர் கிராம அலுவலர்களுக்கு எதிராகத் தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் தாம் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் என்று கிராம அலுவலர்கள் தெரி விக்கின்றனர்.

நலன்புரி நன்மைகள் விடயத்தில் நாட்டின் ஏனைய பாகங்களில் நடை முறையில் இல்லாத விடயங்களை பொதுமக்கள் மத்தியில் திணித்து பொது மக்களை அலைய வைப்பதால் இந்த அதிகாரிகளுக்கு என்ன இலாபம் உண்டு என்பது தெரியவில்லை.

நலன்புரி நன்மைகள் தெரிவில் யாழ். மாவட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன என்பது பொது மக்களுக்கு வெளிப்படையாக தெரிந்த விடயம்.

இந்த அதிகாரிகள் எதற்காக இவ்வாறு நடக்கிறார்கள்? யாருக்காக நடக்கிறார்கள்? யாரை காப்பாற்ற முனை கிறார்கள் என்று தெரியவில்லை.

இவ்வாறு நாட்டில் இல்லாத புது விடயங்களை நடைமுறைப்படுத்திப் பொது மக்களை கிராம அலுவலர்களுக்கு எதிராகத் தூண்டி விடுவதால் ஏதாவது வன்முறைகள் ஏற்பட்டால் பாதிக்கப்பட போவது கிராம அலுவலர்களும் அப்பா விப் பொது மக்களுமே.-என்றுள்ளது.



# போதைப் பாவனையை கட்டுப்படுத்தப் பரிந்துரை

(ஹஸ்பர், அஸ்வர்)

இளைஞர் அபிவிருத்தி அகத்தின் ஏற்பாட்டில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பரிந்துரை நிகழ்வானது வெள்ளிக்கிழமை (08) இளைஞர் அபிவிருத்தி அகத்தின் ஆலோசகர் பொ.சச்சிதானந்தம் தலைமையில் திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கக் கிளை மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் கலந்து கொண்டார்.

இளைஞர் குழுவும் மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளும் இணைந்து மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதை பொருள் பாவனை மற்றும் விற்பனையை கண்டறியும் நோக்கில் பின்வரும் பரிந்துரைகள் அடங்கிய மனுவை மேலதிக அரசஅதிபரிடம் கையளித்தன.

போதை பொருள் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு மையங்களை செயற்படுத்தல், தொழில் வழிகாட்டல் மையங்களை இயங்கு நிலைக்கு கொண்டு வருதலும் நிலை நிறுத்தலும், மாவட்ட பிரதேச இளைஞர் வேலை வலையமைப்புக்களை ஏற்படுத்தல், சிவில் அமைப்புகளும் தமது பங்கைத் தொடர்வதுடன் எதிர்காலத்தில் இணைப்பைப் பலப்படுத்தி நெருக்கமாக இயங்குதல்.

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டங்களில் இளைஞர்களால் இனம் காணப்பட்ட பிரச்சினைகளில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட பரிந்துரைகளே இதன் போது கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர், செயலாளர், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மாவட்ட சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு சங்க இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை பிராந்திய சுகாதார அதிகாரிகள் அட்டாளைச்சேனை ஆஸ்பத்திரிக்கு விஜயம்

(எம்.எம்.றம்ஸீன், நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட அட்டாளைச்சேனைப் பிரதேச வைத்தியசாலைக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி, உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் உள்ளிட்ட குழுவினர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

அங்கு நடைபெறும் பீ.எஸ்.எஸ். பீ செயற்றிட்டம் தொடர்பான வேலைத் திட்டங்கள் மற்றும் பொதுமக்களால் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

கலந்துரையாடலின் போது கல்முனை பிராந்திய மருந்து விநியோகப் பிரிவை அட்டாளைச்சேனைப் பிரதேச வைத்தியசாலைக்கு இடம் மாற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வைத்தியசாலையின் உத்தியோகத்தர்களிடமும் பணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. வைத்தியசாலையிலில் உள்ள உபகரணங்களின் நிலைமை மற்றும் பாவனைக்குட்படுத்தப்படும் நடைமுறைகள் தொடர்பிலும் நேரடி அவதானம் செலுத்தப்பட்டது.

இதன் போது கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளையும் சிபாரிசுகளையும் விரைவில் செய்வதற்கான பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதனை விரைவுபடுத்துமாறும் பணிப்பாளர் அந்தக் குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.



# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டம்

## 20ஆம் நாள் நிகழ்வுகள்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டத்தில் 20 ஆம் நாள் நிகழ்வு நேற்று (09) வியாழக் கிழமை யாழ். பல்கலைக் கழகக் கல்வி யல் துறை கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் பிரதம விருந்தினராகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் எம். ஜி.காணடீபன் கௌரவ விருந்தினராக வும் இராமநாதன் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் திருமதி வைகுந்தம் கணேசப் பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி வீரபத்திர் ஆலய அற நெறி பாடசாலை, பழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை, வேரற்கேணி கந்தசுவாமி அறநெறிப் பாடசாலை, இலஞ்சி ஆரியம் அறநெறிப் பாடசாலை, நாராயணன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நிகழ்வுகளை வழங்கியி ருந்தனர்.

சாவகச்சேரி பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோ கத்தர் திருமதி செ.பிரபா 'மனித நேயம்' என்னும் தலைப்பில் கருத்துரை யும் செல்வி பா.யோகராணி 'சரவணபவ என்னும் திருமந்திரம்' என்ற தலைப்பிலும் சிறப்புரை நிகழ்த் தினர்.

சிவ.மகாதேவதானு நாதக் குருக்க ளின் நெறியாள்கையில் செல்வி அஷ் விகா கேதீஸ்வரசர்மாவின் வயலின் இசை, கொழும்பு, பிருந்தாவன் இசைக் குழுவினரின் இசைக் கச்சேரி என்ப னவும் இடம்பெற்றன.



















# அம்பாறை வலைப்பந்தாட்டம் சாம்பியனானது காரைதீவு!

**( வி.ரி.சகாதேவராஜா)**

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தால் நடத்தப்படும் இளைஞர் விளையாட்டு விழாவின் அம்பாறை மாவட்டத்துக்கான போட்டிகள் நேற்று முன்தினம் அம்பாறை பொது மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அங்கு இடம்பெற்ற வலைப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் காரைதீவு இராமகிருஸ்ணா இளைஞர் அணி இறுதிப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்று தேசிய மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியில் கல்முனை வடக்கு பிரதேச செயலக அணியுடன் மோதிய காரைதீவு அணி வெற்றி பெற்று தேசிய போட்டிக்கு தெரிவானது.



# மாகாண மட்டத்தில் புதிய சாதனை

**(மன்னார் நிருபர்)**

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் (08) இடம் பெற்ற 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 300 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட தட்சனா மருதமடு மகா வித்தியாலய மாணவி யோ. சுடர்மதி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

2018 ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் மாணவி ஒருவர் குறித்த நிகழ்வை 51.7 செக்கனில் முடித்து சாதனை நிகழ்த்தி இருந்தார் .

அதனை நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற போட்டியில் யோ.சுடர்மதி 50.08 செக்கன்களில் ஓடி முடித்து புதிய மாகாண சாதனையை நிலை நாட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடிதண்ணீர் பெறுவதற்கு முண்டியடிக்கும் மக்கள்

**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பகுதியில் கடந்த மூன்று தினங்களாக குடி தண்ணீர் இன்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நீர் வெட்டு மூன்று நாள்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனை நிவர்த்திக்கும் வகையில் நேற்று (09) கிண்ணியா நகர சபை ஊடாக பவுஷர் மூலம் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டது.

பொது மக்களின் முறைப்பாட்டுக் கமைய கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.அனீஸ் எடுத்த நடவடிக்கையை அடுத்துப் பெரியாற்று முனை, பெரிய கிண்ணியா உட்பட பல பகுதிகளில் உள்ள மக்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டது.







# தொழில் முயற்சியாளர் கலந்துரையாடல்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களுக்கான அறிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் (08) பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் அட்டாளைச்சேனை வங்கி, வலய முகாமையாளர் ஐ.யூ.நபீஸா தலைமையில் இடம்பெற்றது. இதில் திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ் வளவாளராக கலந்து கொண்டார்.

தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட், வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ரீ. பரமானந்தம் மற்றும் கருத்திட்ட உத்தியோகத்தர் எம்.எப். நவாஸ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஸபான, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ். அப்துல்லாஹ் , எம்.ஐ.மனாப் உட்பட சமுர்த்தி உத்தியோகத்தர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

யூனிசெவ் நிறுவனத்தின் பாடசாலை மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம் ரிசாட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதி அதிபர் திருமதி எஸ்.ஜே.ஏ. கபூர் கல்முனை வலய தமிழ் பாடத்துக்குப் பொறுப்பான வளவாளர் ஜெஸ்மி மூசா ஆகியோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு கையளித்தனர்.

## ஜி -20 உச்சி மாநாடு:

# 15 நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பு



ஜி-20 உச்சி மாநாட்டுக்கு இடையில் 3 நாட்களில் 15 நாட்டு தலைவர்களை பிரதமர் மோடி தனித்தனியாக சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்புகள் குறித்தும் ஆலோசனை களை நடத்தியுள்ளார்.

அதன்படி, ஜி-20 உச்சி மாநாட்டுக்கு இடையில் பிரிட்டன், ஜப்பான், ஜேர்மன், இத்தாலி போன்ற நாடுகளின் தலை வர்களுடன் பிரதமர் மோடி நேற்று சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

அத்துடன், ஜி-20 மாநாட்டின் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜ/க்நாத் ஆகியோரையும் பிரதமர் மோடி தனித்தனியாக நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுதொடர்பில் பிரதமர் மோடி கருத்து தெரிவிக்கையில், பங்களாதேஷ் – இந்தியா இடையே வர்த்தக தொடர்பு, மக்கள் தொடர்பு குறித்து பிரதமர் ஹசீனாவுடன் விரிவாக பேசினேன். இந்தச் சந்திப்பு மிகவும் சிறப்பாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், பங்களாதேஷ் – இந்தியா இடையே போக்குவரத்தை அதிகரிப்பது, கலாச்சாரம் உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மொரீஷியஸ் பிரதமர் ஜ/க்நாத்தை சந்தித்த பின்னர் பிரதமர் மோடி தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், பிரதமர் ஜாக் நாத்துடனான சந்திப்பு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தியா 75 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை கொண்டாடிய சூழ்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் 75 ஆண்டுகளாக தூதரக உறவு இருப்பது மிகவும் சிறப்பானது என்று குறிப்பிட்டுள்ளார்.

# மகாத்மா காந்தி நினைவிடத்தில் உலகத் தலைவர்கள் அஞ்சலி!






ஜி-20 உச்சி மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று காலை உலகத் தலைவர்கள் டெல்லி ராஜ்காட் பகுதியில் அமைந்துள்ள மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

ஜி-20 உச்சி மாநாடு டில்லியில் நேற்று ஆரம்பமானது. இதில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் உட்பட பல்வேறு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில் இரண்டாம் நாளான இன்று காலை டில்லி ராஜகாட் பகுதியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் சென்றுள்ளனர். மழைக்கு நடுவே அங்கு சென்ற தலைவர்களை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

ஐ.நா. பொது செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், சர்வதேச நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா, பங்களாதேஷ் பிரதமர் ஷேர் ஹசினா, சிங்கப்பூர் பிர்டஹமர் லீ ஸிங் லூங் ஆகியோர் முதலில் ராஜ்காட் சென்றனர்.

காந்தியின் நினைவிடத்துக்கு சென்ற ஒவ்வொரு தலைவரையும் பொன்னாடை அணிவித்து பிரதமர் மோடி வரவேற்றார்.

காந்தி குடில் பின்னணியில் அவர்களுக்கு பிரதமர் மோடி பொன்னாடை போர்த்தி னார். பின்னர் தலைவர்கள் காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வியட்நாம் புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கே தலைநகர் ஹனோயில் அவர் அந்த நாட்டுத் தலைவருடன் முக்கிய ஆலோசனையில் ஈடுபடவுள்ளார்.

வியட்நாமுடன் சீனா எல்லைப் பிரச்சினையில் ஈடுபட்டு வரும் சூழலில் அமெரிக்க ஜனாதிபதியின் வியட்நாம் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, இன்று பிரதமர் மோடி பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோனுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

# மொரோக்கோவில் தொடரும் மீட்பு பணிகள்: உயிரிழப்பு எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்தது!

மொரோக்கோவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 12 ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன், இரண்டாயிரத்து 500 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். மொரோகோவின் தெற்கில் உள்ள மாகாணங்களில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், அந்த நாட்டின் மன்னரான ஆறாம் முகமது மொரோக்கோரவில் மூன்று நாட்கள் தேசிய துக்க தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கான தங்குமிடம், உணவு மற்றும் ஏனைய உதவிகளை வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு உள்ளூர் நேரப்படி 11 மணியளவில் ஏற்பட்ட 6.8 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கம் மராகேஷ் உள்ளிட்ட பல நகரங்களைத் தாக்கியது.



இந்த நிலநடுக்கம் மரகேஷிலிருந்து தென்மேற்கே 71 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஹை அட்லஸ் மலைகளில் ஏற்பட்டது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கமானது, 350 கிலோமீற்றர் தொலைவில் உள்ள தலைநகர் ரபாத் மற்றும் காசாபிளாங்கா, அகாதிர் மற்றும் எஸ்ஸௌயிரா ஆகிய இடங்களிலும் உணரப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தினால் அல் ஹௌஸ் மாகாணத்தில் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், தொடர்ந்தும் மீட்பு பணிகள் இடம்பெற்றுவருகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ரஷ்யாவுக்கு எதிராக தாக்குதலை உக்ரைன் 30 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டும்!

## அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரி தெரிவிப்பு

ரஷ்ய துருப்பினருக்கு எதிராக உக்ரைனின் எதிர் தாக்குதல்கள் 30 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரியான ஜெனரல் மாக் மில்லி தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியினுள் எதிர் தாக்குதலை நிறைவு செய்ய தவறும் பட்சத்தில், கடுமையான குளிர்கால சூழல், உக்ரைனால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கடினமாக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்பார்த்ததை விட தாக்குதல்கள் தாமதமாகவே நடைபெற்ற போதிலும், தற்சமயம் உக்கிரமான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில், தாக்குதலில் உக்ரைன் மெதுவாக முன்னேற்ற முறையிலேயே மேற்கொள்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் முன்னிலை தரப்புடன் நேருக்கு நேராக மோதுகின்றது எனவும் அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரியான ஜெனரல் மாக் மில்லி தெரிவித்துள்ளார்.



உக்ரைனில் உள்ள ரஷ்ய ஆக்கிரமிப்பு பிரதேசங்களை விடுவிப் பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் சிறிய அளவிலான வெற்றியை பெற்றுள்ளன என செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், உக்ரைனிய உயர்மட்ட இராணுவ ஜெனரல்கள் தெற்கின் ரஷ்யாவின் வலிமையான முன் வரிசை பாதுகாப்பு நிலைகளை வெற்றி கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# ஆழ்கடலில் கிடைத்த தங்க முட்டை!



அமெரிக்காவின் அலாஸ்கா வளைகுடாவில் 3 ஆயிரத்து 300 அடி ஆழத்தில் தங்க முட்டை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

முட்டை என சந்தேகிக்கப்படும் இந்த மர்ம பொருள் குறித்து தற்போது அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இதன் முதற்கட்ட பரிசோதனையில் இந்த மர்மப்பொருள் உயிரியல் தோற்றம் கொண்டது என தெரியவந்துள்ளது.

முட்டை வடிவிலான இந்த பொருள் வெடித்து சிதறியதால், ஏதேனும் உயிரினம் வெளியே வந்திருக் கலாம் என விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்த மர்மமான பொருளின் அகலம் 10 சென்றி மீற்றர். இது உண்மையிலேயே முட்டையாக இருந்தால், கடலுக்கு அடியில் கண்டுபிடிக்கப்படாத உயிரினமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.